RNI No: TNTAM/2023/88599

# திரை மொழி

THIRAI MOZHI TAMIL MONTHLY

தமிழ் மாத இதழ்

| திரை : 02 | மொழி : 08 | மார்ச் - 2025 | பக்கம்: 8 | விலை: ரூ.10 |
|---|---|---|---|---|
| Volume : 02 | Issue : 08 | March - 2025 | Page: 8 | Price: Rs. 10 |

# இந்திய சினிமாவில் பெண்கள்

இந்திய சினிமாவில் பெண்களின் வருகையும் அவர்களின் சாதனையும் தனித்துவமானது. பெண் திரைப்படங்களின்கலைப்பொருளாய் காட்சிப் பொருளாய் அர்த்தப்படுத்தப் பட்ட பின்னே சலனத் திரைப்படங்கள் உயிர்ப் பெற்றன.

1917ல் இந்திய சினிமாவின் ஆங்கிலேய இந்தியப் பெண்கள் மட்டுமே நடிக்க முன்வந்த காலத்தில் துணிச்சலுடன் திரைப்படத்தில் நடிக்க வந்தவர் தேவிகாராணி.



இவர் ரவிந்திரநாத் தாகூரின் அக்கா மகளாவார். பல ஐரோப்பிய திரைப்படங்களை பார்த்த தாக்கத்தின் மூலம் தன் ஆவலை வளர்த்துக் கொண்டவர். பிறகு இயக்குநர் ஹிமன்சுராயை காதலித்து திருமணம் செய்து கொண்டார். பின்பு கணவருடன் இணைந்து அன்றைய பம்பாயில் பாம்பே டாக்கீஸ் எனும் திரைப்பட கம்பெனியை துவக்கி பல வெற்றிப் படங்களை எடுத்தார். மேலும் ஸ்டுடியோ அதிபராகவும் பல சாதனைகள் புரிந்துள்ளார். இவரது கணவர் இயக்கி நடித்த காமா படத்தில் கதாநாயகியாக நடித்த தேவிகா ராணி முத்தக் காட்சியில் நடித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தினார். தன் ஸ்டுடியோவில் கடைநிலை ஊழியராக இருந்த பாடும் திறமை கொண்ட இளைஞனை அடையாளம் கண்டுகொண்டு அவனை கதாநாயகனாக நடிக்க வைத்தார். தன் முதலாளி தேவிகாராணிதான் கதாநாயகி என்று அறிந்து கூச்சப்பட்டு

> பக்கம் 4ல் தொடரும்

“அஷ்டாவதானி, கதாநாயகர்களுக்கு இணையான பாத்திரப்படைப்பு வேண்டும் என்ற பிடிவாத குணம், வல்லமை மிகுந்த நடிப்பு, இசையமைத்து, பாடல் எழுதி, தானே பாடும் குரல் வன்மை என அனைத்தும் பெற்றவர் பி.பானுமதி. நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவர் என அறிஞர் அண்ணாவால் பாராட்டப் பெற்றவர்.”

## கட்டுரையாளர் இயக்குநர் புவனா ராம் பற்றி...



**புவனா ராம்**
**எழுத்தாளர், இயக்குநர், தயாரிப்பாளர், சமூக சேவகர்**

கட்டுரையாளர் புவனாராம் 14 வருடம் பத்திரிகையாளராக தமிழகத்தில் பரிமளித்தவர். இவர் சிறு வயதில் இருந்தே கலையின் மீதும், சினிமாவின் மீதும் ஆர்வம் கொண்டிருந்ததால், எழுத்து இவருக்கு கைவரப்பெற்றது. இவர் VB FILMMAKERS என்ற தயாரிப்பு நிறுவனம் ஆரம்பித்து 5 குறும் படங்களையும், பல DOCUMENTARY, மீரா உட்பட பல தொலைக்காட்சி சீரியல்களையும் தயாரித்து எழுதி இயக்கியிருக்கிறார். இவரது பல குறும்படங்கள் மற்றும் ஆவணப்படங்கள் முழு நீள திரைப்படங்கள் பல சர்வதேச விருதுகளையும் இந்தியன் பனோரமா உட்பட பல தேசிய, சர்வதேச விருதுகளையும் பெற்று இருக்கிறது. ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவில் திரைத்துறை சம்பந்தப்பட்ட பல பயிற்சி வகுப்புகளை எடுத்து இருக்கிறார். திரைப்பட சம்பந்தமான பல சர்டிபிகேட் வகுப்புக்களை முடித்திருக்கிறார். இவர் அமெரிக்காவில் தான் சந்தித்த அனுபவங்களை வைத்துக்கொண்டு இரண்டு கலாச்சாரங்களை சேர்ந்த பெண்களைப் பற்றிய ஒரு கதையை நகைச்சுவை கலந்து “லவ் மீ ஸ்டுபிட்”எழுதி தயாரித்து படமாக இயக்கியிருக்கிறார். இவர் இந்த படத்தை முழுவதுமாக முடித்து 90% லாஸ் ஏஞ்சல்ஸ் நகரத்திலேயே எடுத்திருக்கிறார். முற்றிலும் வெளிநாட்டு TECHNICIAN களை வைத்து இவர் மிகுந்த சிரமங்களுக் கிடையே நடுவே ஒரு சேலஞ்ச்சாக இந்த படத்தை எடுத்து முடித்துவிட்டு பல திரைப்பட விருதுகளுக்கும், திரைப்பட விழாக்களுக்கும் அனுப்பி பல விருதுகளையும் தட்டிச்சென்று இருக்கிறார். இந்த படத்தை அவருக்கு இந்தியா வில் உள்ள அனைத்து மொழிகளிலும் ரிலீஸ் செய்ய வேண்டும் மற்றும் உலக க்ளோபல் டிஸ்ட்ரிபியூஷன் செய்ய வேண்டும் என்கிற நோக்கில் இவர் சென்னையில் இப்பொழுது அதற்கான பணிகளில் ஈடுபட்டு வருகிறார். தொடர்ந்து படங்களை தயாரிக்கும் தயாரிப்பு நிறுவனம் இதை வாங்கி வெளியிட்டால் இந்த படம் உலகெங்கும் சேரும் என்கிற நம்பிக்கை அவருக்கு இருக்கிறது. இனி மற்ற தயாரிப்பு நிறுவனங்களின் தயாரிப்பில் வேலை செய்ய முடிவு எடுத்திருப்பதாக கூறிய புவனா, இந்திய சினிமாவில் பெண்கள் என்கிற தலைப்பில் நமக்காக ஒரு கட்டுரையும் கொடுத்திருக்கிறார்.




டிஸ்கவரி புக் பேலஸ்
1055-B, முனுசாமி சாலை, கே.கே. நகர்,
சென்னை-78 | 9940446650
திரையிடல், நூல் வெளியீட்டுக்கான
70 பேர் அமரக்கூடிய சிற்றரங்கம்


டிஸ்கவரி புக் பேலஸ்


டிஸ்கவரி ஆர்ட் கேலரி


பிரபஞ்சன் அரங்கம்


ஜெயகாந்தன் குடில்

டிஸ்கவரி புட் கார்னர்

## படைப்பாளியின் பக்கம்

# எழுத்தாளர் தி.குலசேகர்

**9941284380**

ஆனந்த விகடன் இவரை நன்னெஞ்சே என்கிற சிறுகதையின் வாயிலாக அறிமுகப்படுத்தியது. இதுவரை சிறுகதை, நாவல், சிறுகதை தொகுப்பு, குறுநாவல், நாவல், கவிதை தொகுப்பு, கட்டுரை தொகுப்பு, திரைக்கதைகளின் நாவல் வடிவம், உலக சினிமா என பன்முக தளங்களில் 95 நூல்கள் எழுதி இருக்கிறார். இவரது படைப்புகளை அன்னம், சந்தியா, ஆழி, புஸ்தகா, வேரல் புக்ஸ், புலம், வம்சி, உயிர்மை போன்ற பதிப்பகங்கள் வெளியிட்டிருக்கின்றன.

மதுரை அமெரிக்கன் கல்லூரியில் ரசாயனத்தில் முதுகலை படித்துக் கொண்டிருக்கையில், தூத்துக்குடி ஸ்பிக் உரத்தொழிற்சாலையில் பணி கிடைத்து. அங்கே பதினைந்து வருடம் பணிபுரிந்திருக்கிறார். அவளது கலை, இலக்கியத்திற்கான அஸ்திவாரம் அங்கே தான் போடப்பட்டிருக்கிறது. அங்கிருந்த வேளையில் முதுகலை இதழியல் பட்டயப் படிப்பு படித்திருக்கிறார். பிற்பாடு சிறிதுகாலம் காஞ்சி கற்பூர கம்பெனி மற்றும் அபான் ஆஃப்ஷோர் நிறுவனத்தில் பணிபுரிந்திருக்கிறார்.

டி.வி.ஆர் நினைவு சிறுகதை விருது, புதிய பாதை – நீலமலை தமிழ்ச்சங்கம் சிறுகதை விருது, லில்லி தேவசிகாமணி நினைவு இலக்கிய விருது. செ.இராம.சுப்பையா நினைவு இலக்கிய விருது, கவிக்கோ விருது, சௌமா விருது, திருப்பூர் தமிழ்ச் சங்க இலக்கிய விருது போன்ற விருதுகள் பெற்றிருக்கிறார். இவரது சிறுகதைகள் சாந்திநிகேதனில் பணிபுரிந்த பேராசிரியர் முத்தையா அவர்களால் வங்க மொழியில் மொழிபெயர்க்கப் பட்டு 'பிரேமாந்தர்' இதழில் வெளியிடப்பட்டிருக்கிறது.

குமுதம் இணைய தொலைக்காட்சியில் நிகழ்ச்சி தயாரிப்பாளராக இருந்திருக்கிறார். தினமலரில் ஸ்பெஷல் கரஸ்பாண்டன்ட் ஆக இருந் திருக்கிறார். 'மெட்ரோ நாவல்' என்கிற திரைநாவல் இதழில் பொறுப்பாசிரியராக பணி புரிந்திருக்கிறார்.

ரேவதி இயக்கிய கதை கதையாம் காரணமாம் குறுந்தொடர்களில் திரைக்கதை, வசனம் எழுதி, இணை இயக்குநராகவும் பணியாற்றி இருக்கிறார். தொலைக்காட்சி தொடர்களில் திரைக்கதை, வசனம் மற்றும் எபிசோட் இயக்குநராக பணியாற்றி இருக்கிறார். கேப்டன் தொலைக்காட்சியில், நடிகை ரோகிணி தொகுத்து வழங்க, 'உலக சினிமா' என்கிற தொடர் நிகழ்ச்சியை எழுதி, இயக்கியிருக்கிறார்.

லீலா மணிமேகலையோடு சேர்ந்து தமிழகத்தில் உள்ள ஏழு மாவட்டங்களை சேர்ந்த பழங்குடியினர் பற்றிய ஆவணப்படம் மற்றும் சில விளம்பரப்படங்களில் பணியாற்றி இருக்கிறார். இரண்டு குறும்படங்களை இயக்கி இருக்கிறார்.



திரைப்படத்துறையில் துணை, இணை இயக்குநராக, இயக்குநர் கே.பாக்யராஜ், ராஜன் சர்மா டி.எஃப்.டி, எம்.எம். ரங்கசாமி, ரேவதி, வஸந்த் சாய், ராதாகிருஷ்ணன் பார்த்திபன் போன்றவர்களிடம் பணிபுரிந்திருக்கிறார். உலக சினிமா பற்றியும், வாழ்வியல் பற்றியும் எழுதி வருகிறார். அதே வேளையில், திரைக்கதை விவாதங்களில் கலந்துகொள்கிறார். சில இயக்குநர்களுக்கு கதை, வசனம் எழுதுகிறார். திரைப்பட இயக்கத்திற்கான பணிகளிலும் ஈடுபட்டிருக்கிறார்.




# நிலா ஒன்று பாடல்கள் பல...

கவிஞர் ந. வாசுகி



நிலவைப் பற்றி பாடாத கவிஞர்களை இல்லை எனலாம். 2000 ஆண்டுகளுக்கு முந்தைய சங்க காலம் தொட்டு இன்று வரை கவிஞர்களுக்கு நிலா என்பது அவர்களின் கற்பனைத் திறனுக்கு ஓர் ஊற்றாக இருந்து கொண்டிருக்கிறது. கவிஞர்களுக்கு கற்பனையின் பிறப்பிடமாக எப்பொழுதும் நிலா உலா வந்து கொண்டிருக்கிறது. புறநானூற்றுப் பாடலில், பாரி மகளிராகிய அங்கவையும் சங்கவையும் தங்கள் சோகம் முழுவதையும் நிலவை சாட்சியாக வைத்து இறக்கி வைத்த பாடல் தான்

"அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவின்
எந்தையும் உடையோம், எம் குன்றும் பிறர் கொள்ளார்
இற்றைத் திங்கள் இவ்வெண்ணிலவின்
வென்று எறிமுரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார்; யாம் எந்தையும்
இலமே"



உடுமலை நாராயணகவி

என் தந்தை பெரிய வள்ளல் குணம் படைத்தவராக இருந்தார். எல்லோருக்கும் வாரி வாரி வழங்கினார். ஆனால் இன்று எங்கள் நிலை, எங்கள் பறம்புமலையையும், எங்கள் தந்தையையும் இழந்து தவிக்கிறோம் என்கின்ற சோக உணர்வை, இனிமேல் எப்படி வாழப் போகிறோம் என்று புலம்பாமல் சுருக்கமாக நிலாவிடம் தங்கள் துயரத்தை வெளிப்படுத்துவார்கள்.

அன்றைக்கும் இதே பௌர்ணமி வெண்ணிலாதான் இருந்தது. நாங்கள் அனைவரும் மகிழ்ச்சியாக இருந்தோம். இன்றைக்கும் அதே வெண்ணிலாதான் இருக்கிறது. ஆனால் இன்று எம் நாடோ, எம் தந்தையோ எம்மோடு இல்லை என்ற வருத்தத்தை, உள்ளக் குமுறலை வெளிப்படுத்துவதாக இப்பாடல் உள்ளது.

ஒரு கவிதையோ அல்லது பாடலோ விளக்க உரை போன்று விவரித்து நீளமாகச் சொல்வதாக இருக்கக் கூடாது. கவிதையின் மையக் கருத்தை நேரடியாகக் கூறாமல் படிப்பவர், கேட்பவர்களின் கற்பனைக்கு இடம் கொடுத்து அதை அவர்கள் தங்கள் திறமையால் உணரும்படி செய்வதுதான் சிறந்த கவிதைக்கான இலக்கணம்.

கவிஞர்கள் அனைவரும் தங்கள் கவிதைகளில் சோக, சுக உணர்வுகளை இறக்கி வைப்பதற்கு நிலவைத் தான் சாட்சியாக அழைப்பார்கள். ஒரு பெண்ணானவள் தன் மகிழ்ச்சியை, தன் துக்கத்தை, தன் ஏக்கத்தை மற்றவர்களிடம் வெளிப்படையாகச் சொல்வதில்லை. பெண் என்பவள் மிகவும் அந்தரங்கமானவள். தன் உணர்வுகளை அடுத்தவர்களிடம் வெளிப்படுத்துவதற்குத் தயங்குவாள். காரணம், மற்றவர்கள் அவளைப் பற்றி அவதூறாகப் பேசுவார்களோ என்ற அச்சம். அதே வேளை, தான் சொல்லும் விஷயங்கள் மற்றவர்களால் திரித்து சொல்லப்படலாம். இதனால் தேவையில்லாத பிரச்சனைகளை சந்திக்க நேரிடலாம் என்ற தயக்கமும் தான்.

" ஆறும் அது ஆழமில்லை
அது சேரும் கடலும் ஆழமில்லை
ஆழம் எது ஐயா?
அந்தப் பொம்பள மனசுதாய்யா#

பொதுவாகப் பெண்களைப் பற்றிச் சொல்லும் போது கடலின் ஆழத்தைக் கூட கண்டு கொள்ள முடியும். ஆனால் ஒரு பெண்ணின் மன ஆழத்தை கண்டு கொள்ள முடியாது என்பார்கள். இந்தக் கருத்து அறியாமையில் வெளிப்படும் கருத்தாகத் தான் இருக்கிறது. ஆடவர்கள் எதைப் பேசினாலும் ஏற்றுக் கொள்ளும் இச்சமூகம், ஒரு பெண் தன் மன உணர்வுகளை வெளிப்படுத்தும் போது பல விமர்சனங்களை அவள் முன் வைப்பதால் தான் ஒரு பெண் தனக்குள்ளாகவே உரையாடிக் கொள்கிறாள். அவளின் மொழி மௌனத்தின் பிம்பமாக மட்டுமே இருக்கிறது.

எவ்வளவு நாள் அல்லது எவ்வளவு நேரம் தான் ஒரு பெண் தன் இச்சைகளை, மகிழ்ச்சியை, துக்கங்களை, எதிர்பார்ப்புகளை தனக்குள்ளாகவே பேசிக் கொண்டு தன் உணர்வுகளை அடை காப்பாள்?

தன் உணர்வுகளை எப்படியாவது வெளிப்படுத்த வேண்டும் என்ற உந்துதலில் அவள் தேடுகின்ற ஒரு துணை நிலவுதான் இல்லையென்றால் தோட்டத்துச் செடி, கொடிகளோடு உரையாடிக் கொண்டிருப்பாள்.

வானில் உள்ள வட்ட நிலவிடம் மொட்டை மாடியில் நின்று தன் நெஞ்சம் திறந்து தன் உணர்வுகளை அவள் வெளிப்படுத்துவதற்கான காரணம் நிலவை அவள் தன் உற்ற தோழியாகவும், தன்னைப் போல் ஒரு பெண்ணாகவும் பாவிப்பதால் தான்.

எல்லாப் பருவப் பெண்களுக்கும் நிலவுதான் நெஞ்சுக்கு நெருக்கமான தோழியாக இருக்கிறாள். ஆகவே தான் தன் சுக துக்கங்களையும், காதலையும், ஆசைகளையும் வெளிப்படுத்துவதற்கு நிலவை ஓர் ஊடகமாகப் பயன்படுத்துகிறாள்.

கற்பனை உலகில் ஒரு கவிஞன் சிறகடித்துப் பறக்கும்போது அவன் நிலவைப் பார்த்து பரவசப்படுகிறான். அதனால் தன கற்பனைக்கு பக்க பலமாக நிலவைத் துணைக்கு அழைத்துக் கொள்கிறான்.

இந்த யுக்தியைத் தான் திரைப் படப் பாடல்களிலும் பாடல் ஆசிரியர்கள் கையாண்டு இருக்கிறார்கள். திரைப்படப் பாடல்கள் வருவதற்கு முன்பே 18 ஆம் நூற்றாண்டில் தனிப்பாடல் திரட்டில், இராமச்சந்திர கவிராயர்

"அத்திக் காய் காய் காய் ஆலங்காய் வெண்ணிலவே
இத்திக் காய் காய்ந்துனக்கு என்ன பயன்? பற்றில்லா
அவரைக் காய் , கோவைக் காய் அவதியுறும் பாவைக் காய்
அங்கு மிங்கும் தூது வழங்காய்"

என்று எழுதியிருப்பார். தலைவனை எண்ணி ஏங்குகின்ற தலைவி ஒருத்தி தணல் போல் காயும் வெண்ணிலவை விளித்துப் பேசுவதாக இந்த வெண்பா அமைந்துள்ளது.

இந்தப் பாடலை உள் வாங்கித்தான் கவிஞர் கண்ணதாசன் "பலே பாண்டியா" படத்தில் "அத்திக்காய் காய், காய் என்ற பாடலை எழுதியிருப்பார்.

திரையிசைப் பாடல்கள் அறிமுகமான அந்த நாளிலேயே கொடிகட்டிப் பறந்த மனிதர் பாபநாசம் சிவன். அவர் பெரும்பாலும் வடமொழிச் சொற்களைப் பயன்படுத்தி பாடல்களை எழுதியிருப்பார். அவர் எழுதிய பாடல் தான் "வதனமே சந்திர பிம்பமோ" என்ற பாடல்.

இவருக்கு அடுத்தபடியாக வந்த உடுமலை நாராயணகவி திரை உலகின் வாத்தியார் என்று அழைக்கப்பட்டவர். அவர் "தெய்வப்பிறவி" எனும் படத்திற்காக எழுதிய "அன்பாலே தேடிய என் அறிவுச் செல்வம் தங்கம்" என்ற பாடலில் "கடல் நிலவாய் காட்சியிலே கலந்து நின்றோம் பிரேமையால்" என்று அழகுபட வர்ணிக்கிறார்.

உடுமலை நாராயணகவிக்கு பின்பு வந்தவர் தான் மருதகாசி. இவரும் நிலவைத் தொடர்புபடுத்தி பல பாடல்கள் எழுதியுள்ளார். "சந்திரனைக் காணாமல் அல்லி முகம் மலருமா" என்ற பாடல் மிகப் பிரபலமான பாடல். "குலமகள் ராதை" எனும் படத்தில் இடம்பெற்ற பாடல் இது.

மருதகாசிக்குப் தன்னை திரை உலகில் நிலைநாட்டிக் கொண்டவர் பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம். "என்னருமைக் காதலிக்கு வெண்ணிலாவே, நீ இளையவளா?, மூத்தவளா?, வெண்ணிலாவே" என்று எல்லோரும் இந்நாட்டு மன்னர் என்ற திரைப்படத்திற்காக எழுதியிருப்பார்.

பட்டுக்கோட்டைக்கு பின் திரை உலகில் தனக்கென ஒரு சாம்ராஜ்யத்தை அமைத்துக் கொண்டவர் தான் கவிஞர் கண்ணதாசன். கவிஞர் பல திரைப்பட பாடல்களை நிலவை மையமாக வைத்துப் பாடியிருப்பார். இவருக்குப் பின்னால் வந்த வாலி, வைரமுத்து உள்ளிட்ட பல கவிஞர்களும் திரையிசைப் பாடல்களில் நிலவை மையமாகவைத்துப் பாடியிருப்பார்கள். உதாரணத்திற்கு சில பாடல்கள்:

★ நிலாவே வா, செல்லாதே வா வாலி

★ நிலா அது வானத்து மேலே புலமைப்புத்தன்

★ நிலா காய்கிறது, நேரம் தேய்கிறது வைரமுத்து

★ இளைய நிலா பொழிகிறது வைரமுத்து

★ எங்கே அந்த வெண்ணிலா? இரவிசங்கர்

★ பாடு நிலாவே தேன் கவிதை மு மேத்தா

★ வா வெண்ணிலா, உன்னைத் தானே வானம் தேடுதே கங்கை அமரன்

★ பொட்டு வைத்த ஒரு வட்ட நிலா பிறை சூடன்.

இப்படி வரிசைப்படுத்திக் கொண்டே போகலாம்.

**ந.வாசுகி**

நிலா உலா வரும்...

ஆரா DEVOTIONAL

அறம் தமிழ்

அறம் தமிழ் ஒரு நடுநிலை ஊடகம்
தொடர்புக்கு : 9467208208

## இந்திய சினிமாவில் பெண்கள்.... 1-ம் பக்க தொடர்ச்சி

நடிக்க மறுத்த இளைஞனை சமாதானப்படுத்தி நடிக்க வைத்தார். அந்த இளைஞன்தான் பின்னாளில் புகழின் உச்சிக்கே சென்ற நடிகர் அசோக்குமார்.

ஒரு சிறுவனின் தந்தை இவன் குறும்புத்தனத்தை மறக்கும் அளவுக்கு ஏதேனும் வேலை கொடுங்கள் என்று தேவிகாராணியிடம் கேட்டுக் கொண்டார். ஸ்டுடியோவில் இருக்கும் கோடாவில் இருந்து கொண்டு நடப்பதை மேற்பார்வை இடும் வேலை கொடுத்தார் தேவிகாராணி. காலையில் கோடாவில் ஏறும் சிறுவன் எப்பொழுது படப்பிடிப்பு முடிகிறதோ அப்பொழுதுதான் கீழே வருவான். அவனே பின்னாளில் மிகப் பெரும் கதாநாயகனாகி, பட அதிபராகி, இயக்குநராகி திரையுலகில் கொடிகட்டிப் பறந்த ராஜ்கபூர் ஆவார்.



வை.மு.கோதைநாயகி

தமிழில் திரைப்படங்களில் கதை எழுதிய முதல் பெண் எழுத்தாளர் வை.மு.கோதைநாயகி அம்மாள். இவரின் கதைகள் மக்களின் மத்தியில் மிகவும் பிரபலமாக பேசப்பட்டது. இவரது கதையை தாங்கிய படங்கள் வெளியாகும் போது வரும் விளம்பரங்களில் இவரின் பெயர் பிரதானமாக விளம்பரப்படுத்தப் பட்டது. திரைக்குப் பின் நின்றாலும் இவரும் கதாநாயகிக்கு நிகரான தகுதி உடையவராகவே கருதப்பட்டார். இவரது அநாதைப் பெண் ராஜமோகன், ஜெகன்மோகினி ஆகியவை மிகவும் பிரபலமான படைப்புகள். அவர்களுக்கு பின் லக்ஷ்மி எனும் திரிபுரசுந்தரி சிவசங்கரி, அனுராதா ரமணன், திலகவதி போன்ற நாவலாசிரியர்களின் பல நாவல்கள் திரைப்படமானது.

1934 ல் எடுக்கப்பட்ட ஒரு படத்திற்கு எம். கே. தியாகராஜ பாகவதருக்கு ஆயிரம் ரூபாய் சம்பளமும் அவரைக் காட்டிலும் எஸ். டி. சுப்புலட்சுமிக்கு 2000 சம்பளமும் கொடுக்கப்பட்டது. இதே நாட்களில் தான் மேடைகளில் பிரபலமாக இருந்த எம்.எஸ் சுப்புலட்சுமியும் பாலசரஸ்வதியும் திரையில் அறிமுகமாகி

**தெலுங்கை தாய்மொழியாக கொண்ட கண்ணாம்பாள் தமிழை இலக்கணச் சுத்தமாக உச்சரித்தவர். கண்ணகி, மனோகரா, வஞ்சிக்கோட்டை வாலிபன், உத்தம புத்திரன் போன்ற படங்களில் இவர் பேசிய உணர்ச்சிகரமான வசனங்கள் கதாநாயகர்களுக்கு கூட கிடைக்காத கௌரவம் ஆகும்.**

சாதனை படைத்தனர். நந்தனார், பக்தமீரா, சகுந்தலை, சேவாதானம் போன்ற படங்களில் நடித்து எம்.எஸ் சுப்புலட்சுமி பெரும் புகழைப் பெற்றார். இந்தியாவின் மிக உயரிய விருதான பாரத ரத்னா போன்ற விருதுகள் பெற்றவர் ஆவார். முதல் கவர்ச்சிப்படம் 1934ல் வெளியான திரைப்படம் தாசி அபரஞ்சி, புஷ்பவல்லி இதில் தாசியாக நடித்தார்.

தமிழிலிலும் ஹிந்தியிலும் வெளியான வனராஜா டார்ஜான் படத்தில் முதன் முதலில் கவர்ச்சியாக தோன்றி நடித்தவர் கே.ஆர்.செல்வம். பல எதிர்ப்புகளுக்கு நடுவில் அவர் இப்படத்தில் நடித்தார்.

1936ல் ராஜம் டாக்கீஸ் எனும் நிறுவனத்தை துவக்கி மிஸ் கமலா எனும் படத்தை இயக்கி நடித்ததன் மூலம் டி.பி ராஜலட்சுமி எனும் சாதனைப்பெண் இயக்குநர் சாதனைப் பெண்களின் முன்னோடியாவார்.

கணீரென்ற வெண்கல குரலை உடைய கே.பி சுந்தராம்பாள். தனது கணவர் நடிகர் கிட்டப்பாவின் மரணத்திற்கு பின் திரையுலகில் இருந்து ஒதுங்குவதற்காகவே வரும் வாய்ப்புகளைத் தவிர்க்க அதிக சம்பளம் வேண்டும் என்று கேட்டார். அப்படி கேட்டவருக்கு அதையே தருகிறேன் என்று கூறி நடிக்க ஒப்புக்கொள்ள வைத்தவர் ஜெமினி திரு.எஸ்.எஸ்.வாசன் அவர்கள். அவ்வாறு கே.பி சுந்தராம்பாள் நடித்த படம் ஔவையார். அதற்கென அவர் பெற்ற சம்பளம் 1 லட்ச ரூபாய். இன்றைய கணக்கின்படி கிட்டத்தட்ட பத்து கோடிக்கு சமம். காரைக்கால் அம்மையார், பூம்புகார், திருவிளையாடல் போன்ற படங்களில் நடித்தவர். தமது சொந்த ஊரான கொடுமுடியில் முதன்முதலில் கே. பி.எஸ் எனும் திரையரங்கம் கட்டியவர்.

முதல் குழந்தை நட்சத்திரம் பேபி. சரோஜா. இவர் நடித்து 1939ல் வெளியான தியாகபூமி படத்தில் இவரது நடிப்பை பார்த்து அந்த நாட்களில் சுமார் பத்தாயிரம் குழந்தைகளுக்கு சரோஜா என இவரது பெயரை வைத்தார்களாம்.

தெலுங்கை தாய்மொழியாக கொண்ட கண்ணாம்பாள் தமிழை இலக்கணச் சுத்தமாக உச்சரித்தவர். கண்ணகி, மனோகரா, வஞ்சிக் கோட்டை வாலிபன், உத்தம புத்திரன் போன்ற படங்களில் இவர் பேசிய உணர்ச்சிகரமான வசனங்கள் கதாநாயகர்களுக்கு கூட கிடைக்காத கௌரவம் ஆகும்.

அஷ்டாவதானி, கதாநாயகர்களுக்கு இணையான பாத்திரப்படைப்பு வேண்டும் என்ற பிடிவாத குணம். வல்லமை மிகுந்த நடிப்பு, இசையமைத்து, பாடல் எழுதி, தானே பாடும் குரல் வன்மை என அனைத்தும் பெற்றவர் பி.பானுமதி, நடிப்புக்கு இலக்கணம் வகுத்தவர் என அறிஞர் அண்ணாவால் பாராட்டப்பெற்றவர். இயக்குநராகவும் பதியப் பெற்றவர். தமிழ்நாட்டின் முதல் பெண் ஸ்டுடியோ அதிபர் (பரணி ஸ்டுடியோ)

தென் இந்தியாவில் முதல் பெண் நடன இயக்குநர் குமாரி கமலா. இவர் மிகச்சிறந்த பரதநாட்டிய கலைஞர். இவரது நடனத்தை பார்ப்பதற்காகவே மக்கள் பெரிதும் ஆர்வம் கொண்டு திரையரங்கிற்கு வந்தார்கள்.




வைஜெயந்திமாலா

வாழ்க்கை படத்தில் புதுமைப் பெண்ணாக தோன்றியவர் வைஜெயந்திமாலா. இவரது கதாபாத்திரம் திரையில் அறிமுகமாகும் போது அக்கால ரசிகர்கள் திரையை நோக்கி வெள்ளிக் காசுகளை வீசி எறிந்து இவர் மீதுள்ள அன்மை வெளிப்படுத்தினர். திறமையும் அழகும் நிறைந்த இவர் வஞ்சிக் கோட்டை வாலிபன், இரும்புத்திரை, பாக்தாத் திருடன், பார்த்திபன் கனவு மற்றும் இந்தி தெலுங்கு உலகின் முன்னணி நாயகர்களுடன் நடித்தவர். எல்லாப் படங்களிலும் இவரது கதாபாத்திரங்கள் வலுவுடன் அமையப் பெற்றதுக்கு காரணம் இவரது அழகில் ரசிகனுக்கு இருந்த மயக்கமே. திரையில் வைஜெயந்திமாலா வராதே காட்சிகளில் ரசிகர்கள் சற்று இளைப்பார அரங்கை விட்டு வெளியேறிய வரலாறுகளும் உண்டு, இவர் பின்னாட்களில் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராளுமன்ற உறுப்பினராகவும் ஆனார்.

அஞ்சலிதேவி, தனது எட்டு வயதில் நாடகங்களில் நடித்த இவர் பின்னாளில் இயக்குநர் சி. புல்லையா அவர்களால் திரைக்கு வந்தவர். இவர் தமிழ், தெலுங்கு, இந்தி என நானூற்றி ஐம்பது படங்களில் நடித்தது மற்றுமின்றி அனைத்து மொழிகளிலும் இவரே டம்பிங் பேசியிருக்கிறார். இவரது அஞ்சலி பிக்சர்ஸ் மூலம் மும்மொழிகளில் 25 படங்களை தயாரித்திருக்கிறார்.

வழக்கமாக சினிமாவில் கதாநாயகிகளை உருவாக்குவது இயக்குநர்கள் என்ற பெயர் தான் இடம்பெறும். ஆனால் விதிவிலக்காக எழுத்தாளர்களை உருவாக்கிய கதாநாயகி என்ற பெருமை கே.ஆர். விஜயாவையே சாரும். இவர் ஏற்று நடித்த பெண்களை பெருமைப்படுத்தும் கதாபாத்திரங்களால் மக்கள் இவரை தங்கள் வீட்டுப் பெண்ணாக நினைத்துப் போற்றினர். அதை ஈடுசெய்யும் வகையில் பல பெண் கதாபாத்திரங்களை மையப்படுத்தி எழுதப்பட்ட கதைகளில் இவர் தொடர்ந்து நடித்து புகழ்பெற்றார். பல கதாசிரியர்களை ஊக்கப்படுத்தி தனக்கான கதைகளை உருவாக்கி கதாசிரியர்களுக்கு வாய்ப்பு கொடுத்தார். தன் சொந்த கம்பெனி மூலமே அந்த கதைகளை தயாரித்து வெளியிட்டார். தன் கணவரின் உதவியோடு பல படங்களுக்கு பைனான்ஸ் செய்து படங்கள் வெளியாக உதவியிருக்கிறார். தமிழ் சினிமாவில் முதன்முதலில் பட்டிணத்தில்பூதம் படத்திற்காக நீச்சல் உடையில் தோன்றியிருக்கிறார். தனது முதல் படம், நூறாவது படம் இருநூறாவது படம், இருநூற்றி ஐம்பதாவது படம், முன்னூறாவது படம் என அனைத்தையும் தன்னை அறிமுகப்படுத்திய கே.எஸ். கோபாலகிருஷ்ணனையே இயக்க வைத்து தனது நன்றி உணர்வை வெளிப்படுத்தியவர்.

நடிப்பு திறமைக்காக மூன்று தேசிய விருது பெற்று ஊர்வசி சாரதா என்றே அழைக்கப்பட்டவர். துலாபாரம், நிமஞ்சனம் (தெலுங்கு) குங்குமம் படங்கள் மற்றுமின்றி வலிமையான பல படங்களில் நடித்தவர். எல்லா படங்களின் கதைகளையும் தாங்கிப் பிடித்தவர்.



ஷீலா

உலகில் மிக அதிமாக 740 படங்களில் நடித்தவர் ஷீலா பிரேம் நசீருடன் மட்டும் இணையாக இவர் 103க்கும் அதிகமான படங்களில் நடித்துள்ளார். செம்மீன் கருத்தம்மாவாக காலங்கள் கடந்து




நிற்பவர். பல குணசித்திர வேடங்களில் நடித்தவர். யக்ஷகானம் எனும் மலையாள படத்தின் மூலம் இயக்குநராகி பல வெற்றிப் படங்களை இயக்கியவர்.

நடிகையாகவும் பின்னாளில் இயக்குநராகவும் மாறியவர் விஜயநிர்மலா. உலகின் மிக அதிகமான படங்களை இயக்கிய பெண் இயக்குநர் என்ற பெருமையும் இவருக்கு உண்டு. இவரைப்போல தமிழில் நடிகையாக அறிமுகமாகிய நடிகை ஜீவிதாவும் தெலுங்கு திரையுலகில நிறைய படங்களை இயக்கியும் தமது கலையார்வத்தை வளர்த்துக் கொண்டார்.

லட்சுமி, அர்ச்சனா ஆகியோரும் ஊர்வசி விருது பெற்றவர்கள். லட்சுமி மழலைப்பட்டாளம் எனும் படத்தை தமிழ், கன்னடம் என இருமொழிகளில் இயக்கியுள்ளார். நடிகை ஸ்ரீபிரியாவும் சாந்தி முகூர்த்தம், நானே வருவேன் போன்ற படங்களை இயக்கியுள்ளார். சுஹாசினியும் ரேவதியும் நடிகையாகவும் பின் படங்களை இயக்கியும் உள்ளனர். பல நல்ல திரைப்படங்களில் நடித்தது மற்றுமின்றி தனது டி.வி. தொடர்களை தயாரிக்கும் நிறுவனமான ராடானை நிறுவி வெற்றி பெற்ற ராதிகா, ரம்யா கிருஷ்ணன் போன்றவர்களின் உழைப்பும் குறிப்பிட தகுந்தது.

இந்திய சினிமாவில் நர்கீஸ் நிகழ்த்திய மாபெரும் சாதனை மதர் இந்தியா திரைப்படம். ஒரு திரைப்படம் ஏற்படுத்திய தாக்கம். பாராளுமன்றத்தில் ஒரு சட்டத்தை நிறைவேற்றும் வல்லமை பெற்றது என்றால் அது மதர் இந்தியா திரைப்படத்தையும் அதை அடிநாதமாக தாங்கிப்பிடித்த நர்கீஸ் அவர்களையே சாரும். ஒரு நில முதலாளியிடம் தான் பறிகொடுத்த நிலத்தை மீட்க போராடும் பெண்ணாகவே தன் நடிப்பை பதிவு செய்து பாராட்டைப் பெற்றார். இப்படத்தின் தாக்கமாகவே பாராளுமன்றத்தில் நில உச்சவரம்புச் சட்டம் கொண்டு வரப்பட்டது. சினிமாவின் வலிமையை இதை விட வேறு என்ன முன்மாதிரி இட்டுச் சொல்ல முடியும். இந்திய சினிமாவின் முதல் பத்மஸ்ரீ விருது பெற்றவர் நர்கீஸ். இவர் பெயரில் கலை வித்தகர்களுக்கு தரும் விருது நர்கீஸ் விருதாகும்.

இந்திய சினிமாவை சர்வதேச தரத்துக்கு கொண்டுசென்ற சத்யஜித்ரே, மிருணாள்சென், ஷ்யாம்பெனகல், அபர்ணாசென், மீராநாயர் போன்ற இயக்குநர்களின் பெண் கதாபாத்திரங்கள் மற்ற படங்களில் வரும் சாதாரண கதாபாத்திரங்கள் போல் இல்லாமல் வித்தியாசமானவர்களாக சித்தரித்து காட்டிய விதம் தனித்துவமானது.

சத்யஜித்ரேயின் அபூர்சன்சார், தேவி, சாருலதா போன்ற படங்களில் நடித்து புகழ்பெற்றவர் சர்மிளா தாகூர்.

எண்பதுகளில் வெளியான சச்ரா, பூமிகா மண்டி, சிதம்பரம் என ஸ்மிதா பட்டீல் தாங்கி நடித்த ஒவ்வொரு கதாபாத்திரமும் பெண்களின் வாழ்க்கைப்பதிவுகள். இயக்குநர் குருதத்தின் உறவுப் பெண்ணான கல்பனா தத் இயக்கத்தில் இவர் நடித்த ஏக்பால் திரைப்படம் காதலை மறக்க இயலாமலும் திருமண வாழ்வை ஏற்க இயலாமலும் சுழலும் பல சாமான்ய இந்திய பெண்களின் மனசாட்சியாகவே வெளிப்பட்டது.

**தென் இந்தியாவில் முதல் பெண் நடன இயக்குநர் குமாரி கமலா.**

சமூக ஆர்வலர், நடிகை, எம்.பி என ஏராள அடையாளங்கள். எண்பதுகளில் எடுக்கப்பட்ட பல கலை ஆளுமைகள் கொண்ட சர்ரியலிச படங்களின் இயக்குநர்களின் பலகனமான பாத்திரப் படைப்புகளுக்கு உயிரூட்டியவர்கள் ஷபனா ஆஸ்மியும் சுமிதா பாட்டீலும்.

மீரா நாயரின் சலாம் பாம்பே தனித்துவமான குழந்தைகள் திரைப்படம் பம்பாய் பெருநகரங்களில் கேமரா அலங்காரங்களின்றி தொழில்முறை சாராத சாதாரண சிறுவர்களைக் கொண்டு இயக்கி சர்வதேச அந்தஸ்து வெற்றிகளைப் பெற்றார். காமசூத்ரா, மிஸிஸிபி மசாலா, மான்சூன் வெட்டிங் போன்ற பல படங்கள் இவர் இந்திய சினிமாவின் ஆங்கில அடையாளங்கள். தற்போது நியூயார்க்கில் வசிக்கும் இவர் ஹாலிவுட் படங்களை இயக்கி வருகிறார்.

தீபா மேத்தாவின் பஞ்சபூத குறியீட்டுத்திரைப்படங்களான வாட்டர், பயர், எர்த் போன்ற படங்கள் பெரும் சர்ச்சையில் சிக்கினாலும் இந்திய பெண்களின் சுதந்திரம் பற்றிய கேள்விக்குறிகளை எழுப்பிய படங்களாகும்.

அபர்ணாசென், முக்கியமான இந்திய சினிமாவின் பெண் சிற்பி 36 சௌரங்கி லேன், மிஸ்டர் அன்ட் மிஸஸ் ஐயர் போன்ற படங்களில் பெண் கதாபாத்திரங்களை வலுவாக படைத்து உலக சினிமா பெண் இயக்குநர்களின் வரிசையில் இடம் பிடித்தவர்.

சீமா பிஸ்வாஸ் நடித்த பாண்டிட் குயின் படத்தில் தலித் சமூகம் மாற்று சமூகத்தினரால் எப்படி நடத்தப் படுகிறது என்பதை பதிவு செய்த படம். காட்சி அமைப்புக்காக முழு நிர்வாணமாக திரையில் வந்ததும் முக்கியமான பதிவே ஆகும்.

சுஷ்மிதா சென், ஐஸ்வர்யாராய், லாராதத்தா, யுக்தா முகி என்று பிரபஞ்ச அழகி பட்டம் வென்று திரையுலகிலும் கலக்கிய இவர்களின் சமகால படங்களை மட்டுமல்லாது வர்த்தக உலகிலும் இவர்கள் குறிப்பிடும் பொருட்களை வாங்கவே இந்திய கிராமத்து பெண்கூட கனவு காண்கிறாள் என்பதும் சினிமாவின் வலிமையே.

கலை மாமணி விருது பெற்ற முதல் நடிகை டி. ஆர். இராஜகுமாரி (1950) முதல் பெண் கேமரா வுமன் பி.ஆர்.பந்துலுவின் புதல்வி பி.ஆர். விஜயலட்சுமி.

முதல் பெண் திரைப்பட பாடலாசிரியை திருமதி ரோஷனா பேகம் (குடியிருந்த கோவில்)

முதல் பெண் ஒலிப்பதிவாளர் மீனாட்சி நாராயணன்.

முதல் பெண் திரைப்பட ஜர்னலிஸ்ட் திருமதி. ராஷ்மி பார்த்தசாரதி.

இப்படியாக பெண் சினிமாவிற்குள் நிகழ்த்திய முதல் விஷயங்கள் என்று தேடும் போது சமூகத்திற்கு கிடைக்கும் செய்திகள் வியப்பானவை.

இவர்களை போல் தமிழில் குறிப்பிடும்படியான பாடலாசிரியராக கவிஞர் தாமரை, இசையமைப்பாளராக இளையராஜாவின் மகள் பவதாரணி, ஏ.ஆர் ரகுமானின் சகோதரி ஏ.ஆர்.ரெஹ்னா, நடன இயக்குநர்களாக கலா, பிருந்தா, ஒளிப்பதிவு துறையில் பி.ஆர்.விஜயலட்சுமி, பௌஸியா போன்றோர்களும், ஆடை வடிவமைப்பாளர்களாக வாசுகி பாஸ்கர், பரதேசி படத்திற்காக தேசிய விருது பெற்ற பூர்ணிமா போன்றோர்களும் குறிப்பிட தக்கவர்கள்.

முன்னாள் தமிழக முதல்வர் அம்மா என்று நாட்டு மக்களால் அன்புடன் அழைக்கப்படும் மாண்புமிகு செல்வி டாக்டர். ஜெ. ஜெயலலிதா குழந்தையின் முகம், அசரவைக்கும் ஆங்கிலப் புலமை, கம்பீரமான தோற்றம், தீட்சன்யமான அறிவு, அழகும் திறமையும் தேர்ந்த நடிப்புமாக இவர் திரையில் அறிமுகமாகி பல வெற்றிப்படங்களை கண்டவர். 100 படங்களுக்கு மேல் கதாநாயகியாகவே நடித்தவர். எங்கிருந்தோ வந்தாள், வந்தாளே மகராசி, சூரியகாந்தி, சவாலே சமாளி, திருமாங்கல்யம் போன்ற திரைப் படங்கள் மறக்க இயலாதவை.

தென்னக மொழிகளில் பலதரப்பட்ட முன்னணி நாயகர்களுடன் தன் நடிப்பை இயல்பாக வெளிப்படுத்தியவர். பாராளுமன்ற ராஜ்யசபா உறுப்பினராகவும் திறம்பட செயல்பட்டவர். மக்களின் மனசாட்சியாக மூன்றாவது முறையும் முதல்வராக இருந்தவர். அவரின் தாய்மையும் கருணையும் நமக்கு கிடைத்த வரங்கள். அம்மா அவர்களின் தலைமையில் இந்திய சினிமா தேவதை தனது நூற்றாண்டு விழாவை கொண்டாடியது கூட வரலாற்று வரப்பிரசாதமே. இவரது பொற்கரங்களால் நான் எழுதி, தயாரித்து இயக்கிய திரைப்படத்திற்கு இரண்டு தமிழக மாநில அரசு விருதுகள் 2006 ல் பெற்றதை சர்வதேச திரைப்பட விழாக்களில் என்னுடைய குறும்படங்கள் பங்கேற்றதை விட நான் பெருமையாக கருதுகிறேன்..!

இன்றைக்கு பல பெண்கள் கேமரா, எடிட்டிங், ஆடியோ இன்ஜினியர். நடன இயக்குநர்கள் என்று பல துறைகளில் பணிபுரிய ஆர்வமாய் இருக்கிறார்கள். இவற்றை எல்லாம் எளிமைப்படுத்த விஷுவல் கம்யூனிகேஷன் படிப்பும் இருக்கிறது. தயாரிப்பாளரான புஷ்பாகந்தசாமியும், இயக்குநர்களான ஸ்ரீபிரியா, ஜானகி விஸ்வநாதன், பிரியா.வி, ரோகிணி, மதுமிதா, ஜே.எஸ்.நந்தினி, லஷ்மிராமகிருஷ்ணன், விஜயபத்மா, சுஷ்மா அகுஜா, ரேவதி எஸ்.வர்மா முழு நீள திரைப்படம் எழுதி தயாரித்து இயக்கிய அனுபவங்கள் இருக்கும் என்னைப் போன்றவர்கள் இன்னும் பல படங்களை இயக்கும் துணிச்சலும் ஆர்வமும் திறமையும் இருந்தும் நல்ல திரைப்படங்கள் மக்களால் ஆதரிக்கப் படும்போதுதான் இன்னும் பல பெண் சாதனையாளர்கள் உருவாக முடியும் என்கிற நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு. இந்திய சினிமாவை போற்றுவோம்..! பெண்களை போற்றுவோம்...!

நன்றி TANTIS
இந்திய சினிமா நூற்றாண்டு சிறப்பு மலர்

திரை மொழி TALKIES
Thiraimozhi Talkies

# பாடகர் திலகம் TMS - ன் ஆவணப்படம்

## தயாரிப்பாளர், இயக்குநர் தா.விஜயராஜ் பேட்டி

9585748802 / 9840254983



பத்மஸ்ரீ பாடகர்திலகம் T.M. சௌந்திரராஜன் அவர்களோடு 2000 முதல் 2013 வரை ஒரு இசை பயணம்.

“அடையாறு MGR அரசு திரைப்படக்கல்லூரியில் நடிப்புத் துறையில் முதல்வகுப்பில் தேர்ச்சி பெற்றேன். எனக்குள் சினிமா தாகம் ஏற்படுத்தியவர் “என் அம்மா K. மீனாட்சிதான். கோவையில் பிறந்து சேலம் மாவட்டம் சங்ககிரியில் படித்தேன். பூர்வீகம் கேரளா.

கோவை இரத்தினபுரியில் உள்ள அரசு பள்ளியில் இரண்டாம் வகுப்பு படிக்கும்போது தில்லையம்பல நடராஜா என்று உயர்திரு. ஜெமினி கணேசன் அவர்களுக்கு சௌபாக்யவதி படத்தில் பட்டுக்கோட்டை கல்யாண சுந்தரம் அவர்கள் எழுதி திரு. TMS அவர்கள் பாடிய அந்தபாடலை என் அம்மா பயிற்றுவிக்க நான்பாடி முதல் பரிசு பெற்றேன். காலசக்கரத்தின் சுழற்சி திரைப்படக்கல்லூரி படிப்பு முடிந்ததும் தமிழ்நாடு அரசு திரைப்பட பிரிவில் பணிபுரிந்தேன். கேமிரா உதவியாளராக பணிபுரிந்தேன். முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் உறவினரும் புரட்சித் தலைவர் அவர்களுக்கு 17 படங்கள் திரைக்கதை வசனம் எழுதிய திரு. K. சொர்ணம் அவர்கள் மூலம் இப்பணியில் சேர்ந்தேன். கலைஞர் அவர்கள் நிகழ்ச்சிகளை 1988-91 வரை பதிவாக்கியதில் உதவியாளராக இருந்தேன். அரசு Documentry களில் பணிபுரிந்து நடித்தும் உள்ளேன்.





பின் 1991 to 96 வரை புரட்சித் தலைவி அம்மா அவர்களோடு நிகழ்ச்சி களை பதிவாக்குவதில் பணிபுரிந்தேன். தற்போதுள்ளதுபோல் மீடியாக்கள் இல்லாததால் நாங்களும் தூர்தர்ஷன் மட்டுமே மக்களுக்கு செய்திகளை சொல்லமுடியும் என்ற நிலை அப்போது. பல டாக்கு மென்டிரிகளை பல இடங்களில் பார்த்தேன். இங்கே உள்ள மாபெரும் மேதைகளை யாரும் பதிவாக்குவ தில்லை. அலட்சியம்.

இருக்கும்போது இருட்டடிப்பு. மறைந்ததும் மகுடம் சூட்டுவது என்ற கோரமான காலத்தின் கொடுமைகள் நடுவே இத்தொடரை ஆரம்பித்தேன்.

திரு. T.M.S. அவர்களோடு தமிழ் திரையுலகின் வரலாற்றை சொல்லி உள்ளேன். குறிப்பாக சேலம் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோ, கோவை சென்ட்ரல் ஸ்டுடியோ, கோவை பட்சிராஜா ஸ்டுடியோ என்று திரு. TMS அவர்கள் அன்று பணிபுரிந்த ஸ்டுடியோவில் அவரை தற்போது அழைத்து சென்று படமாக்கி உள்ளேன்.




தொலைக்காட்சி தொடராக ஒரு Episode 20 நிமிடம் என 150 Episode எடுத்து எடிட் செய்து ரெடியாக உள்ளது. அதன் பின் பாடல் உரிமை காட்சி பிரச்சனையில் கிட்டதட்ட என் வாழ்வின் 20 வருடங்கள் போராட்டமாகி தற்போத வெளியிடும் வேலையில் மும்முரமாக உள்ளேன். மக்கள் ரசனைக்கேற்ப தொடரில் 10 நிமிடம் திரு. TMS அவர்களின் வாழ்வு சம்மந்தமான அவர் படித்தபள்ளி, பிறந்தவீட்டில் தற்போது TMS அவர்களை அழைத்து சென்று படமாக்கி உள்ளேன்.

அடுத்த 10 நிமிடம் திரு. இளயராஜா, திரு. ரஜினி, திரு. கமல், திரு. சத்தியராஜ், திரு. விஜயகாந்த், திரு. வடிவேல், திரு. A.R. ரஹ்மான், என்ற திரை உலக கலைஞர்கள் திரு. TMS அவர்களோடு நேரில் உரையாடி உள்ளனர்.

மும்பையில் பாரத ரத்னா லதா மங்கேஷ்கர் அவர்களோடு திரு. TMS அவர்கள் ஹிந்தியில் உரையாடி உள்ளார்.

ஹைதராபாதில் திரு. TMS அவர்களும், திரு. நாகேஸ்வரராவ் அவர்களும் உரையாடுவதை படமாக்கி உள்ளேன்.

என்னதான் எழுதினாலும் இசை அமைத்தாலும் மக்கள் காதுகளில்



சேலம் மாடர்ன் தியேட்டர்











போய் சேருவது குரல் தான்.

பாடல்களில் வார்த்தைக்கு உயிரூட்டி உணர்ச்சிகளை கொட்டி, பாடும்போது பல இசை அமைப்பாளர்களிடம் படைப்புக்காக பாடல் மெருகேற சண்டை போட்டவர் பாடகர் திலகம் TMS அவர்கள்.

அரசியல், பக்தி போக நாத்திக பாடல்களை சிறிதும் மனம் கோணாமல் பாடி திராவிட இயக்கத்திற்கு முரசாக ஒலித்தவர் ஒலித்துக்கொண்டிருப்பவர் திரு. TMS அவர்கள். அதற்காக சென்னை தந்தை பெரியார் திடலில் தமிழர் தலைவர் திரு. வீரமணி அவர்களோடு திரு. TMS அவர்களை உரையாட வைத்து படமாக்கி இயக்கி தயாரித்துள்ளேன்.


இந்த ஆவணப்படம் விரைவில் வெளிவருவதற்கான பணிகள் நடந்துகொண்டிருக்கிறது.

# தமிழ் சினிமாவின் முன்னோடிகள்

ஆத்தியாயம்-5

**V.V.பிரசாத்**
(தீ சினிமா ரிசோர்ஸ் சென்டரின் ஆவனக்காப்பாளர்)

*(தீ சினிமா ரிசோர்ஸ் சென்டர் (TCRC) ஒரு லாப நோக்கற்ற சினிமா ஆவண காப்பகம் ஆகும். இது இந்திய சினிமாவின், முக்கியமாக தென்னிந்தியாவின் பிராந்திய மொழிகளின் ஒலிஒளி சம்பந்தமான கலைப்பொருட்களின் ஆராய்ச்சிக்காக வடிவமைக்கப்பட்டது. இந்தியாவில் உள்ள சென்னை மாநகரத்தை அடிப்படியாக கொண்டு இயங்குகிறது. மேலும் தகவல் அறிய <https://tcrcindia.com/> இணையதளத்தின் மூலம் தொடர்பு கொள்ளவும்.)*



எல்லிஸ் ஆர்.டங்கன்

இந்த அத்தியாயத்தில் நாம் தனக்கென ஒரு வித்யாசமான பாணியுடன் படங்கள் இயக்கிய ஒரு ஜாம்பவான் பற்றி பேசப் போகிறோம். பெரும்பாலானவர்கள் ஒருவர் 14,000 கி.மீ தொலைவிலிருந்து வந்து முற்றிலும் புதிய அணுகுமுறையுடன் வியக்கவைக்கும் படங்கள் 1930-1950 காலகட்டத்தில் எடுத்தார் என்றால் நம்பமாட்டார்கள். அந்த நபர் தான் எல்லிஸ் R டங்கன். இவர் அமெரிக்காவின் ஒஹீயோ மாநிலத்தில் பிறந்த அமேரிக்கா வாழ் அயர்லாந்து நாட்டவர். தமிழ் திரையுலகில் 1930 மற்றும் 40களில் அதிக படங்கள் எடுத்த முதன்மையான இயக்குநர்களில் ஒருவர்.

தென் கலிபோர்னியா பல்கலை கழகத்தில் படிக்கும் பொழுது டங்கன் ஒளிப்பதிவு மற்றும் தயாரிப்பு வடிவமைப்பு துறையில் பல நண்பர்களை பெற்றிருந்தார். அவர்களில் ஒருவர் தான் M.L. டான்டன். இவர் டங்கன் தொழில் வாழ்க்கையில் முக்கிய பங்கு வகித்தார். டான்டன் 30கள் மற்றும் 40களில் தென் இந்தியாவின் முதன்மையான இயக்குநர்களில் ஒருவராக திகழ்ந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. டான்டன் பக்த நந்தனார் படம் எடுக்கும் பொழுது டங்கனை அழைத்து வந்தார். இப்படத்தில் பணிபுரிந்தது டங்கணுக்கு தமிழ் திரை பயணத்தில் முதல் படி என கூறலாம். படத்தின் அதிகாரபூர்வமான பெயர் பட்டியலில் அவர் பெயர் இடம் பெறாவிட்டாலும் டான்டன் படப்பிடிப்புக்கு வர முடியாமல் போகும் போதெல்லாம் டங்கன் அவர்கள் தான் படத்தை இயக்கியதாக கூறப்படுகிறது.

டங்கன் ஆரம்பத்தில் 6 மாதம் மட்டுமே இந்தியாவிற்கு வந்து போவதற்க்கு முடிவு செய்திருந்தார். ஆனால் விதி அவருக்கு வேறு பாதை வகுத்திருந்தது. தமிழ் திரையுலகில் தொடர்ந்து பல ஆண்டுகளாக பணிபுரிந்தார், சரியாக சொன்னால் 15 ஆண்டுகள் ஈடுப்பட்டிருந்தார். இக்காலகட்டத்தில் பல தொழிநுட்பங்கள் அறிமுகப்படித்தியது மட்டும் அல்லாமல் பல ஜாம்பவான் களை உருவாக்கி தமிழ் திரை வரலாற்றில் டங்கன் தனக்கென ஒரு நீங்கா இடம் பிடித்தார் என்று சொன்னால் மிகை ஆகாது.

*1930- 1940களில் அவர் இயக்கிய படங்கள்*

- *1936: சதி லீலாவாதி*
- *1936: சீமந்தினி*
- *1936: இரு சகோதரர்கள்*
- *1937: அம்பிகாபதி*
- *1940: சகுந்தலை*
- *1940: காளமேகம்*

சதி லீலாவதி எல்லிஸ் R டங்கனின் முதல் அதிகாரபூர்வமான தமிழ் திரைப்படம் ஆகும். இவர் இயக்க அரம்பித்ததே ஒரு வித்தியாசமான சூழ்நிலையில் தான். இப்படம் முதலில் மருதாச்சலம் செட்டியார் M.L. டான்டனை வைத்து இயக்குவதாக இருந்தார் ஆனால் கல்கத்தாவில் ஒரு இந்தி படம் எடுப்பதில் டான்டன் ஈடுப்பட்டிருந்ததால் இப்படத்தை இயக்க முடியாத சூழ்நிலையில் இருந்தார். ஆகையால் அவர் டங்கனை சிபாரிசு செய்தார். டங்கன் வயதில் சின்னவராகவும் அதிக அனுபவமில்லாமலும் மொழியும் தெரியாமல் எப்படி இயக்குவார் என மருதாச்சலத்திற்கு தயக்கம் இருந்தது. அதற்கு டான்டன் டங்கன் ஹாலிவுட்டில் பயிற்சி பெற்றவர் என்று சொன்னது தான் தாமதம் செட்டியார் உடனே ஹாலிவுட் என்ற வார்த்தையால் ஈர்க்கப்பட்டு சம்மதம் தெரிவித்து விட்டார்.

டங்கன் அவர்களின் வரலாற்று சிறப்பு மிக்க வெற்றி பயணத்தின் தொடக்கம் மிக பலமாக இப்படத்தின் மூலம் அமைந்தது. இப்படம் தமிழ் திரை வரலாற்றின் பல விஷயங்களில் முத்திரை பதித்தது. படம் வியாபாரரீதியாக மிக பெரிய வெற்றி அடைந்தது மட்டும் அல்லாமல், ஒரு அயல்நாட்டவரால் இயக்க பட்ட முதல் படம் என்ற பெருமையும் பெற்றது. படம் குடிப்பழக்கத்தின் கொடூரத்தை சுட்டிக் காட்டியது.



**M.K. ராதா, M.K. மணி மற்றும் M.R. ஞானாம்பாள் இருக்கும் சதிலீலாவதி**

பக்கம் 8ல் தொடரும்

**பக்கம் 7-ன் தொடர்ச்சி...**

இப்படம் டங்கன் மட்டும் அல்லாமல் பல ஜாம்பவான்களுக்கும் முதல் படமாக அமைந்தது. அதில் முக்கியமான ஒருவர் தான் M.G. ராமச்சந்திரன் அல்லது MGR. படத்தில் போலீஸ் இன்ஸ்பெக்டராக சிறிய வேடத்தில் தோன்றிய அவர் பிற்காலத்தில் அதிகமாக போற்றப்பட்ட கதாநாயகர்களில் ஒருவராக திகழ்ந்தார். பின் வரும் நாளில் புரட்சித்தலைவர் என்று போற்றப்பட்டு தமிழ்நாடு முதல்வராக ஆனார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயமே. அவருடன் நடிகர்கள் M.K. ராதா, T.S. பாலைய்யா, N.S. கிருஷ்ணன் மற்றும் M.R. சந்தானலட்சுமி அறிமுகம் ஆனார்கள். ஜாம்பவான் S.S. வாசனுக்கு இப்படம் திரையுலகில் முதல் படியாக அமைந்தது. இதே பெயருடன் அவர் எழுதிய நாவல் தழுவி இப்படம் எடுக்கப்பட்டது. வாசன் அவர்களின் திரைப்பயண வரலாற்றை பற்றி வேறு அத்தியாயத்தில் விரிவாக பேசுவோம்.

அம்பிகாபதி டங்கனின் மகுடத்தில் மற்றும் ஒரு மணி என கூறலாம். இப்படம் 52 வாரங்களுக்கு திரையரங்குகளில் ஓடியது, ஆம், ஒரு முழு வருடம். வியாபாரரீதியாகவும் மிக பெரிய வெற்றி பெற்றது. படத்தின் கதாநாயகன் M.K. தியாகராஜ பாகவதற்கு (MKT) சிந்தாமணியின் மிக பெரிய வெற்றிக்கு பிறகு மீண்டும் ஒரு மாபெரும் வெற்றிப்படமாக இந்த படம் அமைந்தது. டங்கனின் முதல் படமான சதிலீலாவதியில் நடித்த T.S. பாலையா வில்லனாக இப்படத்திலும் நடித்தார். அவருடைய நடிப்பு வெகுவாக பாராட்டை பெற்றது. பன்முக நடிகரான பாலையா பல வேறு பாத்திரங்கள் மற்றும் குணச்சித்திர வேடங்களில் நடித்து தமிழ் திரை வரலாற்றில் தனக்கென ஒரு முத்திரை பதித்தார்.

சிந்தாமணி மற்றும் அம்பிகாபதி படங்களின் மாபெரும் வெற்றியை தொடர்ந்து (ஒரே வருடத்தில்) MKT அவர்களுக்கு தமிழ் சினிமாவின் முதல் சூப்பர் ஸ்டார் என்ற அங்கீகாரம் கிடைத்தது. நடிப்பு மட்டும் அல்லாமல் அவருடைய பாடும் திறமையும் பெரும் வரவேற்பு பெற தொடங்கியது. அவர் பாடிய இசை தட்டுக்கள் கரோனா காலத்தில் முகக்கவசங்கள் போல விற்றன. MKTயின் சிறப்புமிக்க திரை வாழ்க்கைக்கு அதிரடியான தொடக்கம் கொடுத்தவர்கள் Y.V. ராவ் மற்றும் டங்கன் என்றால் மிகை ஆகாது.

படம் மேலும் பல விஷயங்களுக்காக பேசப்பட்டது குறிப்பாக நடிகர் நடிகை இடையே இருந்த நெருக்கமான காட்சிகள். இது அக்கலாக்கட்டத்தில் அபூர்வம் ஆகும். டங்கன் வசனம் எழுத தமிழ் அறிஞர் இளங்கோவனை நியமித்தார். ஆகையால் வசனங்கள் கவித்துவம் வாய்ந்ததாக இருந்தது. இது அப்பொழுது மக்களுக்கு வித்யாசமாகவும் சுவாரஸ்யமாகவும் இருந்தது. இது தமிழ் சினிமாவில் வசனம் எழுதும் முறையையே மாற்றியது. படத்தில் இடம் பெற்ற "தூக்கமும் உன் கண்களை தழுவட்டுமே அமைதி உன் நெஞ்சில் நிலவட்டும்" என்ற வசனம் மிக பிரபலம் அடைந்தது. பின்னாளில் கவிஞர் கண்ணதாசன் இதே வரிகளை வெகுவாகப் பாராட்டபட்ட 1961ல் வெளியான ஆலயமணி படத்தின் ஒரு பாடலுக்கு பயன்படுத்தினார் என்பது குறிப்பிடத்தக்கது.

டங்கன் இப்படத்தில் கதாநாயகன் கதாநாயகியை பார்த்து கண் அடிப்பது போன்ற காட்சி அமைத்திருந்தார். இக்காட்சி ரசிகர்களிடையே பெரும் வரவேற்பை பெற்றது. இந்த பாணி MKTக்கு பின்னர் நடிப்பின் அங்கமாகவே மாறிவிட்டது.

சகுந்தலை படத்திலுருந்து டங்கணுக்கு MS என்று அழைக்கபடும் இசை ஜாம்பவானான M.S. சுப்புலக்ஷ்மியுடனான கூட்டமைப்பு தொடங்கியது. MSம் அவரது கணவர் சதாசிவமும் அவர்களுடைய ராயல் டாக்கீஸ் கம்பெனி மூலம் இப்படத்தை தயாரித்து வசனமும் எழுதினர்.




இப்படத்தின் முக்கிய கதாபாத்திரத்தில் MS நடிக்க கதாநாயகனாக பிரபல கர்நாடக பாடகர் G.N. பாலசுப்ரமணியம் நடித்திருந்தார். முதலில் K. சுப்ரமணியம் இயக்குவதாக இருந்தது. ஆனால், வேறு படங்களில் அவர் ஈடுப்பட்டிருந்ததால் டங்கனை தேர்ந்து எடுத்தனர். பிரபல ஜோடி N.S. கிருஷ்ணன் மற்றும் T.A. மதுரம் படத்தில் நகைச்சுவை காட்சிகளுக்காக சேர்க்கப்பட்டனர். படம் நல்ல விமர்சனங்கள் பெற்றது மட்டும் அல்லாமல் வியாபாரரீதியாகவும் மிகப்பெரிய வெற்றி அடைந்தது.

ஒரு கவிஞன் கூறும் வார்த்தைகள் யாவும் நிஜத்தில் நடக்கும். அந்த கவிஞனுடைய வாழ்க்கை வரலாறு தான் காளமேகம் படம். முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்க டங்கன் நாதஸ்வர வித்வான் T.N. ராஜரத்தினம் பிள்ளையை தேர்ந்தெடுத்தார். கர்நாடக இசை வரலாற்றில் தனக்கென்ன ஒரு முத்திரை பதித்த இந்த ஜாம்பாவனுக்கு இதுவே முதலும் கடைசியுமான படமாக அமைந்தது. படத்தில் அவருக்கு நாதஸ்வரம் வாசிக்க வேண்டிய அவசியம் இல்லாத போதிலும் டங்கன் அவருடய ரசிகர்களை திருப்தி படுத்த ராஜரத்தினம் அவர்கள் நாதஸ்வரம் வாசித்துக் கொண்டு தெருக்களில் உலா வருவது போல் காட்சி அமைத்திருந்தார். இந்த காட்சி வியாபாரரீதியாக யோசித்து வைக்கபட்ட காட்சியாக நம்பப்படுகிறது.

படம் வியாபாரரீதியாக பெரும் வெற்றி பெறாவிட்டாலும் ராஜரத்தினம் பிள்ளை தோன்றிய ஒரே திரைப்படம் மற்றும் டங்கனின் தொழிநுட்ப புதுமைகள் போன்ற விஷயங்களுக்காக தமிழ் திரை ஆர்வளர்களிடையே ஞாபகப்படுத்தப்படுகிறது. குறிப்பாக ஒரு கிராமமே மணற்புயல் காரணமாக மூழ்கும் காட்சிக்காக சின்னஞ்சிறிய வடிவம் செய்து டங்கனே அதை படம் பிடித்திருந்தார். இக்காட்சி தோன்றும் பொழுது திரையரங்குகளில் மக்கள் எழுந்து நின்று பலத்த கரகோஷம் எழுப்பியதாக கூறப்படுகிறது.




**ஆனந்த விகடன் தீபாவளி மலர் 1939ல் வெளிவந்த**
**காளமேகம் படத்தின் விளம்பரம்**

1930களின் தமிழ் சினிமா பட இயக்குநர்களை பற்றி மேலும் பல சுவாரஸ்யமான தகவல்களைளுடன் அடுத்த அத்தியாயத்தில் சந்திக்கிறோம். தொடர்ந்து படியுங்கள்.

தொடரும்...




**திரை மொழி**

நிறுவனர்/ஆசிரியர் : R. சுப்ரமணிய பாரதி
பொறுப்பு ஆசிரியர் : N. மூர்த்தி
சிறப்பாசிரியர் : M. வேடியப்பன்,
கௌரவ ஆசிரியர்கள் : குரு ரங்கதுரை, ISR செல்வகுமார்
உதவி ஆசிரியர்கள் : ஸ்ரீராம் பத்மநாபன், V. கார்த்தி குமார்
தலைமை நிருபர் : பாலமுரளிவர்மன்

தொடர்புக்கு :
thiraimozhinews@gmail.com
9500074478 | 9566153766

Owned, Published, and Printed by **R.SUBRAMANIYA BHARATHI.** Printed at **CHENNAI OFFSET PRINTERS**, No, 19/1, 21/2, Kithabath Khan Bahadhur Street, Ellies Road, Chennai- 600 002 and Published from No. 41/14, F3, Loganathan Nagar, 2 nd Street, Choolaimedu, Chennai-600 094. **Editor: R.SUBRAMANIYA BHARATHI**. Mobile: **9566153766, E-mail: thiraimozhinews@gmail.com**